# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்**:37 **தேதி**:-14.11.2017

## தேசிய கவுன்சில் முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

ஒத்தி வைக்கப்பட்ட 35வது தேசிய கவுன்சில் கூட்டம் 14.11.2017 அன்று நடைபெற்றது. திருமிகு சுஜாதா ரே DIRECTOR(HR) இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். தேசிய கவுன்சிலின் ஊழியர் தரப்பு செயலாளராக உள்ள BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு தனது துவக்க உரையில் கீழ்கண்ட பிரச்சனைகளை முன் வைத்தார்.

1. கடந்த உறுப்பினர் சரிபார்ப்பிற்கு பின் இதுவரை ஒரே ஒரு தேசிய கவுன்சில் கூட்டம் தான் நடைபெற்றுள்ளது. இதற்கு மேலாவது தேசிய கவுன்சில் கூட்டத்தை குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் நடத்த வேண்டும்.
2. BSNLன் நிர்வாகக் குழுவும், இயக்குனர் குழுவும் 15 சதவிகித ஊதிய நிர்ணய பலனுடன் கூடிய ஊதிய மாற்றத்திற்கு சாதகமான தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிய வருகிறது. இதற்காக நிர்வாகத்திற்கு ஊழியர் தரப்பின் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.
3. ஊதிய மாற்றத்தை அமலாக்க வேண்டும், மற்றும் துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்தும் 2017, டிசம்பர் 12 மற்றும் 13ஆம் தேதிகளில் BSNL ஊழியர்கள் இரண்டு நாட்கள் வேலை நிறுத்தம் செய்ய உள்ளனர். ஊதிய மாற்றத்தை அமலாக்கவும், துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்தும் அனைத்து அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் இறுதிவரை உறுதியாக போராடும்.
4. DIRECTOR (HR) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு இடையே 16.10.2017 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இந்த ஆண்டு PLI வழங்குவதற்காக ஒரு குழு அமைக்க உடன்பாடு ஏற்பட்டது. இதுவரை அந்தக் குழு அமைக்கப்படவில்லை. இந்த குழுவை உடனடியாக அமைத்து, காலதாமதமின்றி இந்த ஆண்டிற்கான PLI யினை நிர்வாகம் வழங்க வேண்டும்.
5. நிர்வாக தீர்ப்பாய தீர்ப்பின் அடிப்படையில் Sr.ACCOUNTANTகளுக்கு GR.B அந்தஸ்துடன் கூடிய ஜனாதிபத்திய உத்தரவை மாற்றி தருவதற்கு DOTயை அணுக நிர்வாகம் கடந்த தேசிய கவுன்சில் கூட்டத்தில் ஏற்றுக் கொண்டது. இந்த முடிவை மீறும் வகையில் நிர்வாகம் நிர்வாக தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது. இந்த பிரச்சனையில் கார்ப்பரேட் அலுவலகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
6. ஆரம்பத்தில் தவறுதலாக GPFதிட்டம் அமலாக்கப்பட்ட ஊழியர்களின், ஊழியர்களின் EPF நிலுவை தொகை தொடர்பாக தேசிய கவுன்சிலின் தலைவர் நிர்வாகம் EPF விதிகளின் படி நடந்துக்கொள்ள வேண்டும் என வழிகாட்டியிருந்தார். இந்த வழிகாட்டுதல் இதுவரை அமலாக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது.
7. நிறுவனத்தின் புத்தாக்கத்திற்காக BSNLல் உள்ள அனைத்து ஊழியர் மற்றும் அதிகாரிகளின் சங்கங்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கி வரும் சூழலில்,

அமைதியான தொழிற்சங்க நடவடிக்கைகளான தர்ணா, உண்ணாவிரதம் போன்றவற்றிற்கு கூட நிர்வாகம் தடை விதித்து உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. நிர்வாகம் இதனை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

8. சங்கத்தில் உறுப்பினர் அல்லாதவர்களை கவுன்சிலில் நியமனம் செய்வது தொடர்பாக கேரள உயர்நீதி மன்றத்தில் நடைபெற்று வந்த வழக்கு முடிந்துவிட்டது. எனினும் சங்கத்தில் உறுப்பினர் அல்லாதவர்களை அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கொடுத்த கவுன்சில் நியமனங்களை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளவில்லை. இது சரியல்ல. இது போன்ற நியமனங்களை நிர்வாகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
9. JE இலாகா தேர்விற்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பில் SC/ST ஊழியர்களுக்கு குறைந்த பட்ச மொத்த மதிப்பெண்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்ச மதிப்பெண்களை குறிப்பிடாமல் BSNL வெளியிட்டுள்ள 22.05.2017 தேதியிட்ட கடித எண் 7-3/2016-Rectt.ஐ சுட்டிக் காட்டி இந்த தவறை திருத்த வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.
10. BSNLல் பணி புரியும் ஊழியர்களுக்கு தற்போது மாதம் 200ரூபாய் மதிப்புள்ள சிம்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மூன்று மாதங்களுக்கு வரம்பற்ற இலவச அழைப்புகளுடன் தினம் 1 GB டேட்டாக்களும் கொடுக்கப்படும் ரூ.429/- திட்டத்தை BSNL நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. மாதம் 200 ரூபாய்களுக்கான சிம்கள் என்பதற்கு பதிலாக ஊழியர்களுக்கு இந்த 429 ரூபாய் திட்டத்தை வழங்க வேண்டும்.
11. கடந்த ஆண்டு நடைபெற்ற JAO LICE தேர்வில் தேர்ச்சி பெற்ற ஊழியர்கள், அதற்கு பின் நடைபெற்ற மறு பரிசீலனை காரணமாக JAO பதவி கிடைக்காமல் உள்ளனர். விடுபட்ட அனைவருக்கும் JAO பதவிகள் வழங்க வேண்டும்.

## ஆய்படு பொருட்கள் மீதான விவாதம்

1) **NEPP அமலாக்கத்தில் உள்ள பாகுபாடு மற்றும் குறைகளை களைய வேண்டும்.**
   ஊழியர் தரப்பில் கீழ்கண்ட விஷயங்களை கோரியுள்ளது:
   a) NEPP உடன்பாட்டில் 01.10.2000க்கு பிந்தைய ஊதிய உயர்வு மேல்நிலைப் படுத்துதல் மட்டுமே பதவி உயர்வின் பகுதியாக ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் நிர்வாகம் TTAக்களுக்கு 01.10.2000த்தில் வழங்கப்பட்ட உயர் ஊதியத்தை NEPPயின் ஒரு பகுதியாக எடுத்துக் கொண்டுள்ளது. இது தவறு.
   b) அந்த உடன்பாட்டின் படி பதவி அடிப்படையிலான பதவி உயர்வுகள் NEPPயின் ஒரு பகுதியாக கருதப்பட மாட்டாது. ஆனால் நிர்வாகம் இதனை மீறியுள்ளது.
   c) NEPPக்கு விருப்பம் தெரிவித்த போது Sr.TOAக்களின் ஊதிய விகிதத்தை 7100லிருந்து 6550க்கு குறைத்து விட்டது. இந்த பிரச்சனை தீர்வு காணப்படவேண்டும்.
   d) DRIVERகேடருக்கு 2002ல் உயர் ஊதிய விகிதம் வழங்கப்பட்டது. அதே போல 01.07.2004ல் LDC TAக்கள் TOAக்களாக மாற்றப்பட்டனர். இவற்றை NEPPயின் முதல் பதவி உயர்வாக கருதப்பட்டுள்ளது. DRIVER கேடர்களுக்கு உயர் ஊதிய விகிதம் வழங்கப்பட்ட போதும், LDC TAக்கள் TOAக்களாக மாற்றப்பட்ட போதோ FR 22(1(a)(1) தரப்படவில்லை. எனவே அவற்றை NEPPயின் முதல் பதவி உயர்வாக கருதக் கூடாது.

அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே இது தொடர்பாக விரிவாக விவாதிக்க விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும், அதில் ஊழியர் தரப்பு விரிவான அவர்களின் நியாயத்தை தெரிவிக்க ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் கவுன்சிலின் தலைவர் தீர்ப்பளித்துள்ளார்.

2) **ஜனாதிபத்திய உத்தரவு கொடுக்கப்பட்டு, 01.10.2000க்கு பின் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள TSMகளை DOT ஊழியராகவே கருதி முதல் பதவி உயர்வை 8 ஆண்டுகள் என இல்லாமல் 4 ஆண்டுகளில் வழங்க வேண்டும்.**

இந்த கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு ஒப்புதலுக்காக நிர்வாகக் குழுவிற்கு கொண்டு செல்ல நிர்வாக தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

3) **JTO LICE தேர்விற்கு விண்ணப்பிக்க NE-9 ஊதிய விகிதத்தில் 5 ஆண்டு சேவை முடித்திருக்க வேண்டும் என்கின்ற கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டும். மாறாக NE-6 ஊதிய விகிதத்தில் 5 ஆண்டு சேவை என்று இருக்க வேண்டும்.**

ஊழியர் தரப்பின் இந்த கோரிக்கை பரிசீலிக்கப்படும் என நிர்வாக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

4) **BSNLல் உள்ள காசுவல் ஊழியர்கள் CDA விகிதத்தில் குறைந்த பட்ச அளவில் ஊதியம் பெறுகின்றனர். CDA விகிதத்தின் குறைந்த பட்ச அளவை 7வது ஊதியக் குழு ஏற்கனவே மாற்றியமைத்துள்ளது. அந்த மாற்றியமைக்கப்பட்ட ஊதியத்தை காசுவல் ஊழியர்களுக்கு வழங்க வேண்டும்.**

இந்த பிரச்சனையை நிர்வாகம் மறு பரிசீலனை செய்யும் என தலைவர் உறுதி அளித்தார்.

5) **JUNIOR ACCOUNTANTலிருந்து SENIOR ACCOUNTANT பதவி உயர்விற்கு சாதகமாக மத்திய தீர்ப்பாயம் மற்றும் உயர் நீதி மன்றம் வழங்கியுள்ள தீர்ப்புகளை அமலாக்குவது தொடர்பாக ஊழியர் தரப்பில் விரிவாக விவரித்தனர்.**

ஊழியர் தரப்பின் இந்த கோரிக்கையின் மீது தலைவர் பரிவு காட்டினார். எனினும் நீதிமன்றத்தில் இந்த பிரச்சனை நிலுவையில் உள்ளதால் இது தொடர்பாக எந்த ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை.

6) **மாதத்தின் 4வது சனிக்கிழமை விடுப்பு வழங்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை ஊழியர் தரப்பில் அழுத்தமாக முன்வைக்கப்பட்டது.**

நிர்வாகம் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

7) **சங்கத்தில் உறுப்பினர்கள் அல்லாதவர்களை கவுன்சிலில் நியமிப்பது தொடர்பாக கேரள உயர்நீதிமன்றத்தில் இருந்த வழக்கு முடிவுக்கு வந்த பின்னரும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் தங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் அல்லாதவர்களை கவுன்சிலுக்கு நியமித்துள்ளதை நிர்வாகம் ஏற்றுக் கொள்ள மறுத்து வருகின்றது. இதற்கு ஒரு தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.**

இந்த பிரச்சனையின் மீது புதியதாக ஒரு சட்ட ஆலோசனை பெறப்படும் என நிர்வாக தரப்பில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

8) **78.2% IDA அடிப்படையில் மருத்துவ அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும் என ஊழியர் தரப்பில் கோரப்பட்டது.**

இந்த பிரச்சனை பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், ஒரு மாத காலத்திற்குள் முடிவெடுக்கப்படும் என்று நிர்வாகம் தெரிவித்துள்ளது.

9) **சிவில் மற்றும் எலக்ட்ரிக்கல் பகுதியில் உள்ள ட்ராப்ட்ஸ்மேன்களுக்கு மேலும் ஒரு JTO LICE தேர்வு நடத்த நிர்வாகம் ஏற்கனவே ஒத்துக் கொள்ளப்பட்ட பிரச்சனை இதுவரை அமலாக்கப்படவில்லை. கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள ESTABLISHMENT பிரிவில் நிலுவையில் உள்ளதாக தெரிய வருகிறது.**

இதனை விரைவில் அமலாக்க தலைவர் ESTABLISHMENT பிரிவிற்கு வழிகாட்டினார்.

10) **பல மாநிலங்களில்** BSNL கட்டிடங்களை DOT எடுத்துக் கொண்டுள்ளது. சமீபத்தில் கர்நாடகா மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் நடைபெற்றுள்ளது. தற்போது ஸ்ரீநகரில் நடைபெற்று வருகின்றது. BSNLன் முக்கிய கட்டிடங்கள் DOT/TERM CELLகளுக்கு வழங்கப்படக் கூடாது என ஊழியர் தரப்பில் கோரப்பட்டது.

CMDக்கு தெரியாமல் எந்த ஒரு CGMமும் BSNLன் கட்டிடங்களை DOT/TERM CELLகளுக்கு வழங்க முடியாது என தலைவர் பதிலளித்தார். மேலும் இந்த பிரச்சனையில் BSNLன் நலன் பாதுகாக்கப்படும் என அவர் உறுதி அளித்துள்ளார்.

11) **BSNL ஊழியர் சங்கம் INDUSTRIAL கேடர்களுக்கான மறு சீரமைப்பை முடிக்க தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. இதற்காக உருவாக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை நிர்வாகம் இதுவரை பரிசீலிக்கவில்லை. இந்த பிரச்சனை மேலும் காலதாமதமின்றி முடிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது.**

இந்த பிரச்சனை சாதகமாக பரிசீலிக்கப்படுமென தலைவர் பதிலளித்தார்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநிலச்செயலாளர்**